பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 22 சனிக்கிழமை 06.03.2021 கதிர் 352

வடமராட்சியைச் சேர்ந்த

## பொலிஸ் உத்தியோகத்தர் கிளிநொச்சி விபத்தில் பலி

(எஸ்.நிதர்ஷன்)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும்வடமராட்சி, பொலிகண்டியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

2

# ஜெனிவா பிரேரணை நகலை அங்கீகரித்தது கூட்டமைப்பு!

## இருக்கும் வடிவத்தில் அப்படியே நிறைவேற்ற அங்கத்துவ நாடுகளைக் கோருகிறது அது



**கொழும்பு,மார்ச்06**

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகப் பிரதான நாடுகள் தற்போது முன்வைத்துள்ள - பிரேரித்துள்ள - 46/01 இலக்கப் பிரேரணை வெற்றி பெற அங்கத்துவ நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருக்கின்றது.**

4

## இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி இன்று யாழில் திடீரென உதயம்!




(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் புதிய கட்சி ஒன்று இன்று திடீரென உதயமாகியுள்ளது.

2

## எத்தனை பிரேரணைகள் கொண்டுவந்தாலும் இராணுவத்தைக் காட்டிக்கொடுக்க மாட்டோம்!

### அமைச்சர் காமினி லொக்குகே கூறுகின்றார்



இலங்கைக்கு எதிராக எத்தனை பிரேரணைகள் கொண்டுவந்தாலும் ஒருபோதும் இராணுவத்தினரைக் காட்டிக்கொடுக்கமாட்டோம். இராணுவத்தினரைப் பாதுகாக்கவிசேட பொறிமுறை சட்டத்தின் ஊடாக வகுக்கப்படும்.

- இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

சர்வதேச போக்குவரத்து

2

## பழிவாங்கும் வகையில் விசாரணை அறிக்கை!

### மைத்திரி குற்றச்சாட்டு

இலங்கை அரசியலில் இருந்து என்னை ஓரங்கட்டும் வகையில் - பழிவாங்கும் வகையில் திட்டமிட்டு என் மீது அநாவசியமான - பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2

## அரசிலிருந்து வெளியேறும் தீர்மானம் இன்னும் இல்லை

### மைத்திரி கருத்து



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் எடுக்கவில்லை.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

2

## ஐ.நாவிடம் நீதி கேட்டு நல்லூரில் 7ஆவது நாளாக உண்ணாவிரதம்

### வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் பங்கேற்பு



(எஸ்.நிதர்ஷன்)

ஐ.நாவிடம் நீதி கேட்டு யாழ். நல்லூர் பின் வீதியில் இடம்பெறும் சுழற்சி முறை உணவு தவிர்ப்புப்

2

### சர்வதேச தைரியம் மிக்க பெண்கள்:

## அமெரிக்காவின் விருதுப் பட்டியலில் இலங்கை சட்டத்தரணி ரனிதா தெரிவு



இலங்கையின் சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ரனிதா ஞானராஜா, அமெரிக்க இராஜாங்க செயலாளரினால் வழங்கப்படும் இந்த ஆண்டுக்கான 'சர்வதேச தைரியம் மிக்க பெண்கள்' விருதுப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி மெய்நிகர் தொழில்நுட்பத்தினூடாக நடைபெறவுள்ள

2

## நிபுணர் குழு கண்துடைப்பு நாடகம்; தெரிவுக்குழுவே அமையவேண்டும்

### சஜித் அணி வலியுறுத்து



புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான நிபுணர் குழு என்பது கண்துடைப்பு நாடகம். எனவே, இந்த விவகாரத்தைக் கையாள்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்க வேண்டும்.

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பியே அரசிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில்

2

## மைத்திரிபாலவைச் சிறைக்குள் தள்ள வேண்டுமானால் உண்மையான சூத்திரதாரிகள் தூக்கிலிடப்படவேண்டும்

### ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிக்கை

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறையில் அடைக்கப்படவேண்டுமானால் அந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் தூக்கு மேடையில் பகிரங்கமாக ஏற்றப்படவேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எந்தவொரு ஊடகவியலாளரை அல்லது எதிரியைக் கொல்லாத ஒரே இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமே. அவர் எவரையும் காணாமல் ஆக்கவோ அல்லது எந்த அமைப்புக்கும் தீ வைக்கவோ அல்லது தன்னைக் கேலி செய்த எவருக்கும் பதிலடி கொடுக்கவோ இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் குண்டர்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள், பாலியல் வல்லுறவாளர்கள், மோசடிக்காரர்கள்

2

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
Sri Lanka Freedom Party

## அமெரிக்காவின் விருதுப் பட்டியலில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விருது வழங்கும் விழாவில் அமெரிக்காவின் முதல் பெண்மணி ஜில் பைடன்தெரிவுசெய்யப்பட்ட பெண்களின் சாதனைகளை அங்கீகரித்து உரையாற்றவுள்ளார்.

உலகெங்கிலும்பெண்களின்அமைதி, நீதி, மனித உரிமைகள், பால்நிலை சமத்துவம், வலுவூட்டல் போன்றவற்றுக்காக போராட்டத்தில் தனித்துவமாக அபாயத்தையும்பொருட்படுத்தாமல்தைரியத்தையும் தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்திய பெண்களை கௌரவிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்படுகின்றது.

ரனிதா ஞானராஜா, அச்சுறுத்தல் மற்றும் சவால்களுக்கு மத்தியில் நாட்டில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிப்புகளை எதிர்நோக்கும் சமூகங்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடியவர் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றங்களின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு இலவச சட்ட உதவி மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்குவதன் மூலம் பல ஆண்டுகளாக கைதிகளின் நீதிக்காக ரனிதா போராடிவருவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தனிப்பட்ட முறையில் போரினால் பாதிக்கப்பட்ட இவர், பாதிக்கப்பட்டவர்களுடன் பணியாற்றிய விரிவான அனுபவத்தின்அடிப்படையில், அவர்களுக்கான நீதியையும் பொறுப்புக்கூறலையும் பெற்றுக்கொடுப்பதில் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளார் எனவும்அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இதற்கமைய 15 ஆவது ஆண்டாக வழங்கப்படும் 'சர்வதேச தைரியம் மிக்க பெண்கள்' விருதுக்கு சட்டத்தரணி ரனிதா ஞானராஜா தெரிவாகியுள்ளார்.

2007ஆம் ஆண்டு முதல் இதுவரை 75 நாடுகளைச் சேர்ந்த 155 பெண்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிபுணர் குழு கண் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புதிய அரசமைப்பு தொடர்பில் யோசனைகளை முன்வைக்குமாறு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த விவகாரத்தைக் கையாளும் நிபுணர்கள் குழுவில் அரசுக்கு சார்பான சட்டத்தரணிகளே இடம்பெற்றுள்ளனர். இப்படியான குழுவின் முன்னால் யோசனை முன்வைத்து தமது தரப்புக்கு பழக்கமில்லை என்று எமது சட்டத்தரணிகள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

ஒன்று, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றி அதன் ஊடாக புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். பல தரப்பு கலந்துரையாடல்களை நடத்தி, உரிய தீர்வை எட்டுவதற்கு இதுவே பொருத்தமான களமாக அமையும்.

அதேவேளை, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து அரச தரப்புக்குள் ஒருமித்த நிலைப்பாடு இல்லை என நிபுணர்கள் குழுவால், எமது சட்டத்தரணிகள் குழாமுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பமே குழப்பமாகவும், அரசுக்குள் முரண்பாடும் உருவாகியுள்ளது. இந்தநிலையில், எப்படி நாம் யோசனைகளை முன்வைப்பது. இது கண்துடைப்பு நாடகமாகும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அரசுக்குத் தோல்வி உறுதி. எனவே, புதிய அரசமைப்பைக் காரணம் காட்டி தேர்தலை இழுத்தடிப்பதே அரசின் நோக்கம். - என்றார்.

## மைத்திரிபாலவைச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பயங்கரவாதிகளிடமிருந்து விடுவித்தவர் மைத்திரிபால சிறிசேனவே.

அதேபோல், பேராசிரியர் விஸ்வ வர்ணபால, பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச மற்றும் கலாநிதி சுரேன் ராகவன் போன்றவர்களைத் தலைமைப் பதவிகளுக்கு நியமித்தவரும் அவரே - என்றுள்ளது.

## ஐ.நாவிடம் நீதி கேட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நேற்று 7ஆவது நாளாக நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து ஆரம்பித்த இந்த உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் இன்று வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் பங்கேற்றுள்ளனர்.

இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் முடிவடையும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டமானது சுழற்சி முறையில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருந்தார்கள்.

அத்தோடு இது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் உரிமைக்கான பிரச்சினை. எனவே, அனைத்து உறவுகளும் வந்து இந்த உணவுதவிர்ப்புப்போராட்டத்துக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சார்பில் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அரசிலிருந்து வெளி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு பல கட்சிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது. அதில் எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதான பங்காளிக் கட்சியாக இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைய எமது கட்சி முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தது. அதேபோல், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியடையவும் எமது கட்சியே பிரதான காரணம்.

ஆனால், அரசுக்குள் இருக்கும் சிலர் இதை மறந்து செயற்படுகின்றனர். அவர்கள் எங்களை வேண்டுமென்றே தூற்றுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கடந்த காலங்களில் எத்தனையோ சவால்களைக் கடந்து வந்தது. எனவே, தற்போதைய விமர்சனங்களைக் கண்டு எமது கட்சி பலம் இழக்காது.

அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் எடுக்கவில்லை. அரசுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம். ஆனால், அரசுக்குள் இருக்கும் சில விஷக்கிருமிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்பது எமது பணிவான கோரிக்கை - என்றார்.

## பழிவாங்கும் வகையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை அடியோடு நிராகரிக்கின்றேன். உண்மைத்தகவல்கள் அதில் மறைக்கப்பட்டுள்ளன.

எனது ஆட்சியில் இந்தத் தாக்குதல் நடைபெற்றபடியால் என் மீது திட்டமிட்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் தொடர்பில் முன்னரே நான் அறிந்திருக்கவில்லை. அதேவேளை, இந்தத்தாக்குதல்நடக்கும்போது நான் நாட்டிலும் இருக்கவில்லை.

எனினும், தாக்குதல் சம்பவத்தை அறிந்தவுடன் உடனே நாடு திரும்பி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். தாக்குதலின் எதிரொலியாக இன ரீதியில் - மத ரீதியில் அரங்கேறக் காத்திருந்த வன்முறைகளைத் தடுத்திருந்தேன்.

விசாரணை ஆணைக்குழு முன் நடந்த உண்மைச் சம்பவங்களைத் தெரிவித்திருந்தேன். ஆனால், விசாரணை அறிக்கை அரசியல் ரீதியில் என்னைப்பழிவாங்கும்வகையில்வெளிவந்துள்ளது. எனினும், எதற்கும் நான் அஞ்சவேமாட்டேன். நான் பொறுமையுடன் இருக்கின்றேன்.

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை பல அரசியல் கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் நிராகரித்துள்ளனர். - என்றார்.

## இலங்கை பாரதிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்றஊடகவியலாளர்சந்திப்பின்போதே இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு கட்சியின் தலைவர் வி.முத்துசாமியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி என்ற புதிய அரசியல் கட்சி ஒன்றை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்தக்கட்சிஅரசியலைமுன்னிலைப்படுத்தாது. அந்த அரசியலுக்குத் தமிழ் பேசும் மக்களைத் தயார்ப்படுத்தும் அல்லது பக்குவப்படுத்தும் செயற்பாடுகளையே முன்னெடுக்கும்.

கட்சியின் தலைவராக வர்த்தகர் வி.முத்துசாமியும், செயலாளராக ஊடகவியலாளர் எம்.இந்திரஜித்தும் மற்றும் நிதிச்செயலாளராக வர்த்தகத்துறையை சேர்ந்த வீ.திலானும் செயற்படுவார்கள்.

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி, ஆங்கிலத்தில் ஸ்ரீலங்கா பாரதிய ஜனதா பார்ட்டி என்றும், சிங்களத்தில் ஸ்ரீலங்கா பாரதிய ஜனதா பக்சய என்றும் அழைக்கப்படும்.

தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் செயற்படுகின்றன. எனினும், தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் புறந்தள்ளிவிட்டு தனிப்பட்ட நோக்கங்களை முன்னிறுத்தியே கட்சிகள் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அந்தக் கட்சிகள் நிலையாக நிற்க முடியாதுள்ளன. இதன் காரணமாகவே அந்தக் கட்சிகள் மக்கள் மத்தியில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி வருகின்றன.

எனினும், இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி மக்களுக்கு வசதி வாய்ப்புக்களான வாக்குறுதிகளை வழங்காமல் தமிழ் மக்களுக்கான கல்வி, ஆங்கிலக் கல்வி, வருமான ஊக்குவிப்பு, விளையாட்டு மற்றும் கலாசார மேம்பாட்டுத் திட்டங்களில் செயற்படவுள்ளது.

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சியின் சேவை ஒரு மதத்துக்கான சேவையாக இருக்காது அனைத்து இனங்களிலும் புறந்தள்ளப்பட்டவர்களை சமூகத்தில் உயர்த்தும் கட்சியாகச் செயற்படும்.

எனவே, அனைத்து சமூகத்தவர்களும் இந்தக் கட்சியில் இணைந்து செயற்படுவார்கள். இலங்கை பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கிய பணிகளாக, தமிழ் கல்வி மாநாடு ஒன்றை நடத்தி அதற்கூடாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும்உள்ளதமிழ்பேசும்மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் 10ஆண்டு திட்டத்தை முன்னெடுத்தல். இதற்காக தமிழ் பேசும் கல்வி சமூகத்தின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பை கோருகின்றோம்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சுயவருமான ஊக்குவிப்பு திட்டங்களுக்கு உந்துதலை வழங்குதல். இதற்கான ஆலோசனைகளை தமிழ் பேசும் சமூகத்தின் பொருளியல் மற்றும் வர்த்தகத்துறையினரிடம் இருந்து எதிர்ப்பார்க்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் விளையாட்டுத்துறை மற்றும் அழிந்துபோகும் கலாசார விழுமியங்களை பாதுகாத்தல். இந்த விடயத்தில் தமிழர் மத்தியில் செயற்படும் விளையாட்டுத்துறை அலுவலர்கள் மற்றும்நிபுணர்களின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

## எத்தனை பிரேரணைகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்து மாறுபட்ட பல கருத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன.

நாட்டு மக்கள் குறிப்பாக கத்தோலிக்க மக்கள்விசாரணைஅறிக்கைதொடர்பில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முழுமையற்ற அறிக்கையை ஆணைக்குழுவினர் சமர்ப்பித்துள்ளார்கள் என்பதை ஆளும் தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பான பொறுப்பை அரசால் ஏற்கமுடியாது.

கடந்த அரசால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஏதேனும் மாற்றம் ஏற்படுத்த ஜனாதிபதி முனைந்தபோது அதற்கு மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை இடமளிக்கவில்லை.

ஆணைக்குழுவில் மாற்றம் ஏற்படுத்தாமல் துரித அறிக்கையைக் கோரினார்கள். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை நிறுத்தப்படவில்லை. விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு நிறைவேற்றும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசு முழுமையாக நிராகரித்துள்ளது - என்றார்.

## பொலிஸ் உத்தியோக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் கிளிநொச்சி - பரந்தன் இடையே வயல்வெளிப் பகுதியில் நேற்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேரி ஜாக்சன் அன்ரனி (வயது - 30) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கி அவர் பயணித்தபோது மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

**இஞ்சி கன்று விற்பனைக்கு**

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# முரணிலை நிலைப்பாடு

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கைக்கு எதிராக பிரதான நாடுகள் தற்போது முன்வைத்துள்ள – பிரேரித்துள்ள – 46/01 இலக்கப் பிரேரணை வெற்றி பெற அங்கத்துவ நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருக்கின்றது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23, 24 ஆம் திகதிகளில் ஜெனிவா அமர்வை ஒட்டி இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆற்றிய உரைக்குப் பதிலளித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயங்களை சம்பந்தன் உட்பட்ட கூட்டமைப்புத் தலைவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்விடயத்தை ஒட்டி கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சில அம்சங்கள் நோக்கற்பாலனவை.

* ஏற்கனவே இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/01, 34/01, 40/01 தீர்மானங்களில் இருந்து வெளியேறுவதான இலங்கையின் அறிவிப்பு அர்த்தமற்றது. அத்தகைய பொறுப்பிலிருந்து இலங்கை வெளியேற முடியாது.
* ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான இப்போதைய அறிக்கையை நிராகரிக்கின்றார் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறுவது அர்த்தமற்றது. இந்த அறிக்கை பெரும்பாலான அங்கத்துவ நாடுகளால் வரவேற்கப்பட்டுள்ளது. உலக நாடுகளில் மனித உரிமை நிலைவரத்தை ஆராய்ந்து வெளிப்படுத்துவது மனித உரிமைகள் ஆணையாளரின் சட்டபூர்வமான செயற்கடமை. அந்த சட்ட பூர்வச் செயற்பாடு நாட்டின் இறைமையையோ, ஆள்புல ஒருமைப்பாட்டையோ மீறும் நடவடிக்கை அல்ல.
* 2015 மார்ச்சில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/01 இலக்கத் தீர்மானத்தை இலங்கையும் சேர்த்து ஆதரித்து அனுசரணை வழங்கியமையை, 2019 இன் ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதலுடன் இலங்கை அரசு இப்போது தொடர்புபடுத்தி, நம்ப முடியாத இட்டுக்கட்டும் கதைகளை அவிழ்த்து விடுகின்றது.
* எனினும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல பத்தாயிரம் தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விளக்கம் ஏதும் கூறுகின்றார் இல்லை.
* உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்ட இலங்கை எந்த உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவேயில்லை.
* புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக 2016 இல் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக எட்டப்பட்ட தீர்மானத்தை முன்னெடுக்க இலங்கை ஆக்கபூர்வமாகச் செயற்படவில்லை. அதற்கு எதிரான போக்கே இப்போது முன்னெடுக்கப்படுகின்றது.
* 1971 மற்றும் 1988/ 89 இல் தென்னிலங்கையில் பல பத்தாயிரம் இளைஞர்கள் சட்ட விரோதமான முறையில் கொன்றொழிக்கப்பட்டனர். அப்போதும் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டன. அவை எவற்றுக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேயில்லை.

– இவை எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதில் அறிக்கையின் பிரதான அம்சங்கள்.

இந்த அறிக்கை இலங்கை வெளிவிவகார அமைச்சரின் ஜெனிவா உரைகளுக்கான கூட்டமைப்பின் பதிலாக இருந்தாலும், இலங்கை விவகாரத்தை ஒட்டி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பிரிட்டன், ஜேர்மன், கனடா, மொன்றிநீக்காலோ, மஸிடோனியா ஆகியவை இப்போது சமர்ப்பித்துள்ள 46/01 இலக்கப் பிரேரணை தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவும் கொள்ளத்தக்கது என்பது அவதானிக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரேரணை தற்போதைய வடிவத்தில் நிறைவேற்றப்படுவதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தாங்கள் எடுத்துரைக்கின்றனர் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்கனவே அறிவித்திருக்கின்றது.

இதே போன்ற ஒரு கருத்து நிலைப்பாட்டையே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதிபலித்து வருகின்றார்.

இந்த நிலையில் 46/01 இலக்கப் பிரேரணையை நிறைவேற்ற ஆதரவு வழங்குமாறு உறுப்பு நாடுகளைக் கூட்டமைப்பு கோருவதானது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் விடயத்தில் மற்றைய இரு கட்சிகளுக்கும் – கஜேந்திரகுமாரின் கட்சி மற்றும் விக்னேஸ்வரனின் கூட்டணி ஆகியவற்றுக்கும் – முழு எதிரிடையான நிலைப்பாட்டை தமிழ்க் கூட்டமைப்பு எடுத்திருப்பதையே வெளிப்படையாக எடுத்துணர்த்தி நிற்கின்றது.

# உரிய விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தால் முக்கியமான புள்ளிகள் இருவர் சிக்கியிருப்பர்!

## விமலசார தேரர் தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக உரிய விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தால் அரசாங்கத்தின் உயர் ஆசனங்களில் இருக்கும் இரண்டு முக்கிய புள்ளிகள் சிக்கியிருப்பர் என தேசிய புத்தி ஜீவிகள் சங்க சபையின் உறுப்பினர் ஹடிகல்லே விமலசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஹடிகல்லே விமலசார தேரர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இனவாத, மதவாத செயற்பாடுகள் இருதரப்பிலும் ஏற்படுவதற்கு, சில அமைப்புகளை விட அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் தேவைக்கமையவே இடம்பெற்றது. இவை எவற்றையும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரிக்கவில்லை.

மேலும் உரிய முறையில் விசாரணைகளைச் செய்திருந்தால், தற்போது அரசாங்கத்தின் உயர் ஆசனங்களில் இருக்கும் இரண்டு முக்கிய புள்ளிகள் சிக்கியிருப்பர். அந்த இருவருமே இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்புக் கூறியிருக்க வேண்டும்.

இதேவேளை துப்பாக்கி கட்டளைச் சட்டத்தை முழுமையாக மீறி, நிஷங்க சேனாதிபதி என்பவர் அவன்கார்ட் என்ற சட்டவிரோத துப்பாக்கி நிறுவனத்தை வைத்திருந்தார். இதன்மூலம் நிஷங்க சேனாதிபதி தனிநபர், அமைப்புகளுக்கு துப்பாக்கிப் பயிற்சியை வழங்கியுள்ளார்.

எனினும் அவர் யாருக்கு, எந்த அமைப்புக்கு துப்பாக்கி பயிற்சியை வழங்கினார் என இதுவரை எவ்வித தகவல்களும் வெளிப்படுத்தப்படவில்லை. இது முற்றிலும் சட்டவிரோத செயற்பாடு.

அவ்வாறு ஆயுதப்பயிற்சி வழங்கப்படுமாயின் அது இலங்கையின் பாதுகாப்புப் பிரிவு அல்லது அரசாங்கத்தால் மாத்திரமே வழங்கப்பட வேண்டும்.

எனவே, தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த ஆணைக்குழுவுக்குப் பொறுப்பொன்று இருந்தது. நிஷங்க சேனாதிபதி யாருக்குப் பயிற்சி வழங்கினார்? இதற்கான நிதி எங்கிருந்து கிடைத்ததென்று ஆணைக்குழு விசாரிக்கவில்லை. – என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் கேதீஸ்வரத்தில் சிவராத்திரி விழா!



மன்னார், திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி வழாவில் ஒருநேரத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு பக்தர்கள் தரிசனம் பெறுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கருணாநந்த குருக்கள் தெரிவித்துள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது போக்குவரத்து, சுகாதாரம், மருத்துவம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதில், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினர், தொண்டர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஆலயத்தின் பிரதம குரு –

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் இந்த வருடத்துக்கான மகா சிவராத்திரி நிகழ்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பாக இன்றைய கலந்துரையாடலில் சிவராத்திரி நிகழ்வின் போது பின்பற்ற வேண்டிய பல்வேறு விடங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அதற்கமைவாக, வெளி மாவட்டங்களில் இருந்து மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குப் பக்தர்கள் வருகை தருவதை இயன்றளவிற்குக் குறைத்துக் கொள்வதுடன், உங்கள் வீடுகளிலும், அயலில் உள்ள ஆலயங்களுக்குச் சென்றும் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்குமாறு வேண்டுகின்றோம்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு வருகின்ற பக்தர்கள், ஏ 32 பிரதான பாதை ஊடான ஆலய வீதியூடாக, அதாவது ஒரு வழிப் பாதையூடாக ஆலயத்துக்கு வருகைதந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியும்.

ஒரேநேரத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு அடியவர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள். எனவே அடுத்து வருகின்ற அடியவர்கள் தரிசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

அனைவரும் நான்கு சாமப் பூசைகளிலும் கலந்துகொள்கின்றமையை இயன்றளவிற்குத் தவிர்த்து நீங்களாகவே ஒவ்வொரு பூசைகளிலும் தரிசித்த பின்பு வெளியேற வேண்டும்.

சுகாதார நடைமுறை காரணமாக பாலாவியில் இருந்து தீர்த்தக் காவடி எடுக்கின்ற நடைமுறை முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், நான்கு சாமப் பூஜைகளுடன் அன்றைய தினத்தில், சிவாச்சாரியார்களால் தீர்த்தக் காவடி மகாலிங்கப் பெருமானுக்கு நடத்தப்படும். இதன்போது, பக்தர்கள் மகாலிங்கப் பெருமானைத் தரிசித்து வேண்டுதல்களை முன்வைக்கலாம்.

இதேவேளை, அனைவரும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து, அனைவரும் நோயற்ற வாழ்வு வாழவும் உலகிலிருந்து விரைவில் கொடிய வகை நோய் இல்லாதொழியவும் பிரார்த்திக்க வேண்டும்.
– எனத் தெரிவித்துள்ளார்.

# பதுளை பொது வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவு மூடப்பட்டது!

பதுளை பொது வைத்தியசாலையில் 31 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டமையையடுத்து, வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நேற்று வெள்ளிக்கிழமை தற்காலிகமாக மூடப்பட்டது.

பதுளை பொது வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனாத் தொற்றுக்கு சாதகமாக பரிசோதனை மேற்கொண்டார்.

அதன் பின்னர் வைத்தியசாலையின் இரு ஊழியர்களும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியமை வியாழக்கிழமை கண்டறியப்பட்டது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை புற்றுநோய் பிரிவில் வைத்தியர், நோயாளிகள் மற்றும் நோயாளர்களை பராமரிப்பவர்கள் உள்ளடங்கலாக 29 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே பதுளை பொது வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டது.

இதேவேளை கொரோனாத் தொற்றுக்குள்ளான ஊழியர்களுக்கு கொவிட் தடுப்பூசி கிடைக்கப் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மியான்மரில் தொடரும் போராட்டம் இந்தியா எல்லையில் ரோந்து தீவிரம்



அண்டை நாடான மியன்மாரில் கடந்த மாதம் 1 ஆம் திகதி ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து ராணுவத்துக்கு எதிராக அங்கு போராட்டங்கள் நடந்து வருகின்றன. போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்காக ராணுவம் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பல்வேறு இடங்களில் போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. பாதுகாப்பு படையினர் துப்பாக்கி சூடு, கண்ணீர் புகை குண்டு வீச்சு, தடியடி நடத்துகின்றனர். இதில் 50 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த பதற்றமான சூழலில், மியான்மரில் இருந்து பொலிஸார் சிலர் இந்தியாவிற்குள் ஊடுருவினர். மியான்மரில் இருந்து இந்திய மாநிலமான மிசோரமில் எல்லை தாண்டி வந்த போலீஸ்காரர்களை அந்த மாநிலபொலிஸார்பிடித்தனர். அவர்களிடம்விசாரித்தபோது, மியன்மார் ராணுவம் இட்ட கட்டளைகளை தாங்கள் நிறைவேற்றாததால், தங்களை ராணுவம் தேடுவதாகவும், எனவே இந்தியாவிடம் அடைக்கலம் பெறுவதற்காக எல்லை தாண்டி வந்ததாகவும் தெரிவித்தனர்.

ராணுவத்துக்கு பயந்து மியன்மார் பொலிஸார் இந்தியாவுக்குள் ஊடுருவிய விவகாரம் மிசோரமில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மியான்மரில் இருந்து மேலும் பல பொலிஸார் மற்றும் பொதுமக்கள் அடைக்கலம் தேடி இந்தியாவுக்குள் ஊடுருவ வாய்ப்பு உள்ளதால், அவர்களை தடுத்து நிறுத்துவதற்காக, எல்லைகளில் ரோந்துப்பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை மியன்மாரில் இருந்து 30 பொலிஸ் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் எல்லை தாண்டி இந்தியாவிற்குள் வந்திருப்பதாக காவல்துறை அதிகாரி ஒருவர் கூறி உள்ளார். அவர்களுக்கு இந்தியாவில் அடைக்கலம் கொடுக்கப்படுமா அல்லது திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்களா? என்பது தொடர்பாக மத்திய அரசு எந்த தகவலையும் வெளியிடவில்லை.

# அமெ. வாழ் இந்தியர்களுக்கு அதிபர் ஜோ பைடன் பாராட்டு

அமெரிக்காவின் 46 ஆவது அதிபராக ஜோபைடன் கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பதவி ஏற்றார். அவர் தனது அரசு நிர்வாகத்தில் அமெரிக்க வாழ் இந்தியர்களுக்கு முக்கிய பொறுப்புகளை கொடுத்து வருகிறார்.

பொருளாதாரம், நிதி மற்றும் மருந்து போன்ற முக்கிய துறைகளில் அமெரிக்க வாழ் இந்தியர்களை நியமனம் செய்துள்ளார்.



சமீபத்தில் நாசா அனுப்பிய விண்கலம் செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இதில் இந்தியவம்சாவளியை சேர்ந்த விஞ்ஞானி சுவாதி மோகன் முக்கிய பங்காற்றினார்.

இந்த நிலையில் அமெரிக்க வாழ் இந்தியர்களை அதிபர் ஜோபைடன் வெகுவாக பாராட்டி உள்ளார். நாசா விஞ்ஞானிகளுடன் காணொலி மூலம் நடந்த உரையாடலில் ஜோபைடன் பேசியதாவது:–

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கர்கள் நாட்டை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்கிறீர்கள். நீங்கள் (சுவாதி மோகன்) என்னுடைய துணை அதிபர் கமலா ஹரிஸ் மற்றும் என்னுடைய பேச்சை எழுதி தரும் வினய் ரெட்டி ஆகியோர் சிறப்பாக செயல்படுகிறார்கள் என்றார்.

ஜோபைடன் நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புகளில் 55 அமெரிக்க வாழ் இந்தியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விஜய் மல்லயா சட்டரீதியான வழக்குகளுக்குப் பிறகே இந்தியா செல்ல முடியும் – இங்கிலாந்து அரசு தெரிவிப்பு



விஜய் மல்லயாவை இந்தியாவுக்கு அழைத்து வருவது தொடர்பான இந்தியாவின் கோரிக்கை சட்டப்பூர்வமான அனுமதிக்குப் பின்னரே நிறைவேற்றப்படும் என்று இங்கிலாந்து அரசு தெரிவித்துள்ளது.

விஜய் மல்லயா இந்திய வங்கிகளிடம் கடன் வாங்கி மோசடி செய்ததாக லண்டனில் தொடரப்பட்ட வழக்கில் இந்தியா விஜய் மல்லயாவை இந்தியா அழைத்து வர சட்டரீதியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

விஜய் மல்லயா விவகாரத்தில் சட்டரீதியான வழக்குகள் நடைபெற்று வருவதாகவும் அவை முடிந்த பின்னரே இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்றும் இந்தியாவுக்கான பிரிட்டன் தூதரக அதிகாரி அலெக்ஸ்எல்லீஸ் தெரிவித்துள்ளார்.

# முகேஷ் அம்பானி வீடு அருகே வெடிப்பொருள்களுடன் சிக்கிய காரின் உரிமையாளர் மன்சுக் ஆற்றில் குதித்து தற்கொலை



தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் இல்லம் அருகே வெடிகுண்டு பொருள்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்கார்பியோ காரின் உரிமையாளர் மன்சுக் ஹிரோன் ஆற்றில் குதித்து தற்கொலை செய்துக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது உடல் மும்பையை அடுத்த தானேயில் உள்ள ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. வெடிகுண்டுகளுடன் கைப்பற்றப்பட்ட காரின் உரிமையாளரான மன்சுக் ஓராண்டு காலமாக காரை தாம் பயன்படுத்தவில்லை என்று விசாரணையில் கூறியிருந்தார்.

காரை விட்டுச் சென்ற ஓட்டுனரை பொலிஸார் தேடி வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை முதல் காரின் உரிமையாளரான மன்சுக்கை காணவில்லை என்று அவர் குடும்பத்தினர் புகார் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மகாராஷ்ரா உள்துறை அமைச்சர் அனில் தேஷ்முக் இந்த வழக்கு தீவிரவாதத் தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

# மகாராஷ்டிராவில் நக்சல்களுக்குச் சொந்தமான துப்பாக்கித் தொழிற்சாலை பொலிஸார் தகர்ப்பு



மராட்டிய மாநிலத்தில் நக்சல் அமைப் பினருக்குச் சொந்தமான துப்பாக்கி தொழிற்சாலையை பொலிஸார் தகர்த்தனர்.

நக்சல் நடமாட்டம் அதிகம் உள்ள கட்சிரொலி (Gadchiroli) மாவட்டத்தில் சட்டவிரோதமாக துப்பாக்கி தொழிற்சாலை இயங்கி வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து கடந்த வியாழக்கிழமை 70 கமாண்டோ படை பொலிஸார் துப்பாக்கி தொழிற்சாலையை சுற்றி வளைத்தனர்.

அப்போது அங்கிருந்த நக்சல்பாரிகள் கமாண்டோகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பி ஓடினர். இதில் கமாண்டோ படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

2 நாள்களாக தொழிற்சாலையை சோதனையிட்ட கமாண்டோ பொலிஸார் பின்னர் தொழிற்சாலையை இடித்து தரைமட்டமாக்கினர்.

# புதுச்சேரி 30 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட வலியுறுத்தும் என்.ஆர்.காங்கிரஸ் நிர்வாகிகள்

புதுச்சேரியில் தொகுதி பங்கீடு தொடர்பாக என்.ஆர்.காங்கிரஸ் – பா.ஜ.க. இடையே இழுபறி நீடித்து வரும் நிலையில், 30 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட என்.ஆர்.காங்கிரஸ் நிர்வாகிகள் தலைமையிடம் வலியுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

18 தொகுதிகள் கேட்கும் என்.ஆர்.காங்கிரஸை, 14 தொகுதிகளில் போட்டியிடுமாறு பா.ஜ.க. கோரி வருகிறது. அத்துடன், முதலமைச்சர் வேட்பாளராக ரங்கசாமியை அறிவிக்கவும் பா.ஜ.க. மறுத்து வருவதாக சொல்லப்படுகிறது.

இதனால் இருகட்சிகளுக்கு இடையே தொகுதி உடன்பாட்டில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது.

இதனிடையே, பேசிய பா.ஜ.க. மாநில தலைவர் சாமிநாதன், என்.ஆர். காங்கிரஸுடன் தொடர்ந்து பேச்சு நடைபெற்று வருவதாகவும், மத்திய அமைச்சர் அமித்ஷா வருவதற்குள் கூட்டணி உறுதி செய்யப்படும் என்றார்.

# ஜெனிவா பிரேரணை நகலை...

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோரின் பெயரில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 23, 24 ஆம் திகதிகளில் ஜெனிவா அமர்வை ஒட்டி இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆற்றிய உரைக்குப் பதிலளித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயங்களை சம்பந்தன் உட்பட கூட்டமைப்புத் தலைவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வியடத்தை ஒட்டி கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சில அம்சங்கள் வருமாறு:–

* ஏற்கனவே இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/01, 34/01, 40/01 தீர்மானங்களில் இருந்து வெளியேறுவதான இலங்கையின் அறிவிப்பு அர்த்தமற்றது. அத்தகைய பொறுப்பிலிருந்து இலங்கை வெளியேற முடியாது.

* ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான இப்போதைய அறிக்கையை நிராகரிக்கின்றார் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறுவது அர்த்தமற்றது. இந்த அறிக்கை பெரும்பாலான அங்கத்துவ நாடுகளால் வரவேற்கப்பட்டுள்ளது.

* உலக நாடுகளில் மனித உரிமை நிலைவரத்தை ஆராய்ந்து வெளிப்படுத்துவது மனித உரிமைகள் ஆணையாளரின் சட்டபூர்வமான செயற்கடமை. அந்த சட்ட பூர்வச் செயற்பாடு நாட்டின் இறைமையையோ,ஆள்புல ஒருமைப்பாட்டையோ மீறும் நடவடிக்கை அல்ல.

மீ 2015 மார்ச்சில் இலங்கை தொடர்பாக நிறைவேறப்பட்ட 30/01 இலக்கத் தீர்மானத்தை இலங்கையும் சேர்த்து ஆதரித்து அனுசரணை வழங்கியமையை, 2019 இன் ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதலுடன் இலங்கை அரசு இப்போது தொடர்புபடுத்தி, நம்ப முடியாத இட்டுக்கட்டும் கதைகளை அவிழ்த்து விடுகின்றது.

* எனினும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல பத்தாயிரம் தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விளக்கம் ஏதும் கூறுகின்றார் இல்லை.

* இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்த உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்ட இலங்கை எந்த உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவேயில்லை.

* புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக 2016 இல் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக எட்டப்பட்ட தீர்மானத்தை முன்னெடுக்க இலங்கை ஆக்கபூர்வமாகச் செயற்படவில்லை. அதற்கு எதிரான போக்கே இப்போது முன்னெடுக்கப்படுகின்றது.

* 1971 மற்றும் 1988/89 இல் தென்னிலங்கையில் பல பத்தாயிரம் இளைஞர்கள் சட்ட விரோதமான முறையில் கொன்றொழிக்கப்பட்டனர். அப்போதும் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டன. அவை எவற்றுக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேயில்லை.

– இவ்வாறு கூட்டமைப்பு தனது அறிக்கையில் கோரியுள்ளது.

# தாய்லாந்தில் ஊனமுற்ற நாய்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் அமைப்பு



தாய்லாந்தில் விபத்துக்களில் காயமடைந்து ஊன முற்ற நாய்களுக்கு அடைக்கலம் கொடுத்து அதற்கு தினசரி நடைப் பயிற்சி, பிசியோதெரபி, ஆரோக்கியமான உணவு உள்ளிட்டவற்றை வழங்கி பரிவு காட்டிவருகிறது ஒரு தன்னார்வ அமைப்பு.

சோன்பூரி மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊனமுற்ற நாய்களுக்கான பராமரிப்பு மையம் The Man That Rescues Dogs என்ற அறக்கட்டளையால் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்த மையத்தில் 600க்கும் மேற்பட்ட நாய்களும் அவற்றை பராமரிக்க 30 ஊழியர்களும் உள்ளனர். ஊனமுற்ற மற்றும் காய மடைந்த நாய்களை தினமும் நடைப்பயிற்சி அழைத்து செல்லும் பணியாளர்கள், அவை ஓடவும் நடக்கவும் பயிற்சி அளித்துவருகின்றனர்.

# பூமிக்கு நெருக்கமாகக் கடந்து சென்ற குறுங்கோள் 2068ம் ஆண்டு பூமி மீது மோதும் என எச்சரிக்கை



நேற்றிரவு பூமியை சிறிய குறுங்கோள் ஒன்று கடந்து சென்றுள்ளது. எகிப்து கடவுளான காட் ஆப் கேயாஸ் எனப்படும் அபோபீஸ் என பெயரிடப்பட்டிருந்த இந்த குறுங்கோள் சுமார் 340 மீற்றர் அகலம் கொண்டதாக இருந்ததாக வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு அரிசோனாவில் உள்ள கிட் பீக் தேசிய ஆய்வகத்தால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் குறுங்கோள், அடிக்கடி சூரியனைச் சுற்றி வருவதும் பூமிக்கு அருகே வந்து செல்வதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அபோபீஸ் குறுங்கோள் 2029ம் ஆண்டு பூமிக்கு மிகவும் நெருக்கமாக வரும் என்றும் 2068ம் ஆண்டில் பூமி மீது மோதுவதற்கு சாத்தியம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஒருவேளை இந்த குறுங்கோள் மோதினால் 88 கோடி தொன் டி.என்.டி. வெடிபொருள் வெடிக்கும் அளவிற்கு விளைவு ஏற்படும் என்றும் கூறியுள்ளனர்.

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்ககளை குறிவைத்து சிரியாவில் பயங்கரவாதிகள் ஏவுகணைத் தாக்குதல்



சிரியாவின் எண்ணெய் வயல்களை குறி வைத்து துருக்கி ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

சிரிய அதிபரின் ஆட்சியை கவிழ்க்க துருக்கி ஆதரவு பயங்கரவாதிகள் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

துருக்கி எல்லையை ஒட்டியுள்ள சிரிய நாட்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது ஏவுகணைகள் வீசப்பட்டதால் அவை கொளுந்து விட்டு எரிந்தன.

இதனால் அப்பகுதி புகைமண்டலமாகக் காட்சி அளித்தது.

# செவ்வாயில் ஆய்வைத் தொடங்கியது பெர்சிவரன்ஸ் மலைகள், பாறைகளுடன் புகைப்படங்கள் வெளியீடு



செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய நாசா அனுப்பிய பெர்சிவரன்ஸ் ஆய்வூர்தி, அந்த கிரகத்தின் தெளிவான படங்களை எடுத்து அனுப்பியுள்ளது.

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யவும், ஏற்கனவே உயிரினங்கள் இருந்தனவா அல்லது உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் உள்ளதா என ஆய்வு செய்ய பெர்சிவரன்ஸ் என்ற ஆய்வூர்தியை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா கடந்த ஆண்டு அனுப்பியது. அங்கு வெற்றிகரமாகத் தரையிறங்கிய பெர்சிவரன்ஸ் சில படங்களை அனுப்பியிருந்த நிலையில், தற்போது செவ்வாய் கிரகத்தில் உள்ள ஜெசோரோ பள்ளத்தாக்கில் சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்துள்ளது பெர்சிவரன்ஸ்.

மணற்பரப்பில் சக்கரங்கள் பதிந்த தடம் போன்றவற்றையும் பெர்சிவரன்ஸ் ஆய்வூர்தி படம் பிடித்து அனுப்பியுள்ளது. ஜெசோரோ பள்ளத்தாக்கு பல கோடி ஆண்டுகளுக்கு முன் ஏரியாக இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதும் நிலையில், அதன் பரப்பை பெர்சிவரன்ஸ் மிகத் தெளிவாக படம் பிடித்துள்ளது.

பெரிய மலைத் தொடர்கள் மற்றும் சிறிய மேட்டுப்பாங்கான நிலப்பகுதி, ஆங்காங்கே குவிந்து கிடக்கும் கற்கள் போன்றவையும் அங்கு காணப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக சிறிய ஹெலிகொப்டர் மூலமும், செவ்வாயின் நிலப்பரப்பில் ஆங்காங்கே துளையிட்டு பாறை மற்றும் மணலைச் சேகரித்தும் ஆய்வுகள் நடத்தப்பட உள்ளன.

# சீனாவின் இராணுவத்துக்கான பட்ஜெட் 6.8 வீதத்தால் உயர்வு



உலகிலேயே இராணுவத்திற்கு அதிக செலவு செய்யும் நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனா 2 வது இடத்தில் உள்ளது. 20 லட்சம் வீரர்களுடன் சீன இராணுவம் உலகின் பெரிய இராணுவமாக திகழ்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக சீனா தனது இராணுவத்தில் பல முக்கிய சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. வெளிநாடுகளிடையே செல்வாக்கை அதிகரிக்கும் வகையில் கடற்படை மற்றும் விமானப்படையை விரிவாக்கம் செய்துள்ளது. குறிப்பாக கடற்படையில் புதிதாக போர் கப்பல்கள் மற்றும் நீர் மூழ்கி கப்பல்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

இராணுவத்தை வலிமைப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதியை தொடர்ந்து உயர்த்தி வருகிறது. இந்த நிலையில், நடப்பு ஆண்டுக்கான இராணுவ பட்ஜெட் 6.8 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, பட்ஜெட்டில் இராணுவத்திற்கு 20,900 கோடி டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசத்தின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான சீனாவின் முயற்சிகள், எந்தவொரு நாட்டையும் குறிவைக்கவோ அச்சுறுத்தவோ அல்ல என்று நாடாளுமன்ற செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் உலகிலேயே முதன்முறையாக 9 மனிதக் குரங்குகளுக்கு கொரோனா தடுப்பூசி



உலகிலேயே முதன்முறையாக, அமெரிக்காவில் 9 மனிதக் குரங்குகளுக்கு சோதனை முறையில் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.

கலிபோர்னியாவின் சாண்டியாகோவில் அமைந்துள்ள மிருக காட்சி சாலையில் வாழும் கொரிலாக்கள் சிலவற்றுக்கு கடந்த ஜனவரி மாதம் கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு பணிபுரியும் ஊழியர்களிடம் இருந்து குரங்குகளுக்கு கொரோனா பரவியிருக்கலாம் எனகூறப்பட்டது. இந்த நிலையில், கால்நடை மருந்து நிறுவனம் தயாரித்த பிரத்தியேக தடுப்பூசி, மிருக காட்சி சாலையிலுள்ள மனித குரங்குகளுக்கு சோதனை முறையில் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசி ஏற்கனவே நாய், பூனைகளுக்கு செலுத்தப்பட்டு சோதித்து பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சியில் இராணுவத்தினர் சுவீகரித்த காணிகளை விடுவிக்குக!

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சிறிதரன் வலியுறுத்தல்

கிளிநொச்சி நகரில் இராணுவம் சுவீகரித்துள்ள காணிகளை விடுத்தல் உள்ளிட்ட தமிழ்மக்களின் சில பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே சிறிதரனால் இவ்வாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி –

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் காணிகளை இராணுவம் சுவீகரத்து வைத்திருக்கிறது அதை விடுவிக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

கிளிநொச்சி பொது நூலகத்திற்கான காணியையும் இராணுவம் சுவீகரித்து வைத்திருக்கிறது அதை விடுவிக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அக்கராயன் கரும்புத் தோட்டத்தின் காணியை தனிநபர்களுக்கு வழங்க முடியாது எனவும் அது கூட்டுறவுச் சங்கத்துக்கே வழங்கப்பட வேண்டும்.

விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் நெல் கொள்வனவு செய்யப்பட வேண்டும். காரணம் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் இம்முறை அதிக விளைச்சலை பெறமுடியாமல் போயுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டே நெல் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

சட்ட விரோதமான மண் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஐ ரோட் திட்டத்தை மிக வேகமாகத் துரிதப்படுத்த வேண்டும். பல்லவராயன் கட்டு வன்னேரி வலைப்பாடு வேரவில் கிராஞ்சி ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் கிளிநொச்சி நகருக்கு வருவதில் பாரிய இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்



களில் இந்தத் திட்ட வீதிகள் இன்னும் ஆரம்பமாகவில்லை.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் அலுவலகம் அநுராதபுரத்துக்கு மாற்ற அனுமதிக்க முடியாது. மீள அதை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர வேண்டும். அல்லாது இந்த நான்கு மாவட்டங்களுக்கும் பொதுவாக மாங்குளத்தில் அதன் அலுவலகம் திறக்கப்பட வேண்டும். அநுராதபுரத்துக்கு மாற்றுவதன் நோக்கம் வேறு சில நோக்கங்களை அடைவதற்காக மாத்திரமே.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலையை மேம்படுத்த ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். குறிப்பாக புதிதாக கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வியியற் கல்லூரியில் இருந்தும் பல்கலைக் கழகத்தில் இருந்தும் புதிதாக ஆசிரியராக நியமனம் பெறுபவர்கள் எமது மாவட்டத்துக்கே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். என்ற கோரிக்கைகளை அவர் முன்வைத்துள்ளார்.

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் அநுராதபுரத்துக்கு இடமாற்றப்படமாட்டாது




காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றப்படாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு காணி அமைச்சரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காரியாலயத்தை அநுராதபுரம் மாவட்டத்துக்குக் கொண்டு செல்வது பிரதேச மக்களுக்குத் தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்தும் எனவும் ஒருங்கிணைப்புக் குழுவில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், காணி அமைச்சருடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்ட கடற்றொழில் அமைச்சர், குறித்த காரியாலயம் மாற்றப்படுவதால் மக்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தினார்.

இதையடுத்து, குறித்த காணிச் சீர்திருத்த ஆணைக்குழுக் காரியாலயம் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலேயே செயற்படும் என உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சர் அருந்திக யாழ்.விஜயம்!



தென்னை, கித்துல், பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இந்த விஜயத்தில், நீண்டகாலமாக கோப்பாய் பகுதியில் சிரட்டை மற்றும் மரங்களைக் கொண்டு பல்வேறு வகையான கலை அலங்காரப் பொருள்களை வடிவமைத்து வருகின்ற தனியார் ஒருவரின் தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அங்கு உரையாற்றிய அமைச்சர் –

சந்தை வாய்ப்பை மேற்கொள்வதற்கும் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி தருவதாகவும் நிறுவனத்தின் உரிமையாளருக்கு உறுதியளித்தார்.

இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள், பரிசுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# கிண்ணியாவிலும் சடலம் அடக்கம் செய்வதற்கு நிலம் அடையாளம்!

திருகோணமலை, மார்ச்.06

கொரோனாவால் மரணமடைவோரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு கிண்ணியா மக்ரூப் கிராமம் (மாகாமாறு) என்ற பிரதேசத்தில் அமைந்திருக்கும் மையவாடியும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் இடத்தைப் பார்வையிடுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர். பிரேமானந்த் உள்ளிட்ட அடங்கிய குழுவினரை அழைத்துச்சென்றிருந்தார்.

இதில் கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர் கே.எம். நிஹார், உறுப்பினர் நஸீர் உட்பட பலர் பங்கேற்றனர்.

# வீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்துக மன்னாரில் பொதுமக்கள் போராட்டம்!





மன்னார் மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களை பூரணப்படுத்தித் தருமாறு கோரி பாதிக்கப்பட்ட மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டதுடன், அரசாங்க அதிபருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் அனுசரணையில் நேசக்கரம் பிரஜைகள் குழு ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டத்தில் ஒன்றுகூடிய மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லாட்சி அரசாங்கத்தால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இன்றுவரை பூரணப்படுத்தப்படவில்லை. இதனால், பயனாளிகள் வீடு அற்றவர்களாகவும், இருந்த குடிசை வீட்டையும் அகற்றியுள்ள நிலையில் பெரும் சிரமத்திற்கு மத்தியில் இருக்கின்றனர் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த வீட்டுத் திட்டத்தை விரைவாகப் பூரணப்படுத்தித் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களால் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பதற்கு எதிர்பார்த்திருந்தபோதும், அவர் வேறு கூட்டமொன்றுக்குச் சென்றிருந்த நிலையில், மாவட்ட மேலதிக செயலாளரிடம் ஜனாதிபதி மற்றும் அரசாங்க அதிபருக்கான மகஜரை மக்கள் கையளித்துள்ளனர்.

# குருநாகலில் வாகன விபத்து; ஊடக நிறுவன ஊழியர் பலி!

குருநாகல், மார்ச்.06

குருநாகல் – மாவத்தகம பகுதியில் சாரதியின் கட்டுபாட்டையிழந்த வான் விபத்துக்குள்ளாகியதில் படப்பிடிப்பு ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாவத்தகம பகுதியில் கடந்த வியாழன் அதிகாலை 1.30 மணியளவில் தொலைக்காட்சி நிறுவனமொன்றின் ஊழியர்களை அழைத்துச் சென்ற வான் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது வானில் சாரதி உட்பட ஐவர் பயணித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து வான் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

கலகெதர பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தருபத்தி உவிந்து சமரகோன் எனப்படும் இவ் விபத்தில் படப்பிடிப்பு ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த எஞ்சிய நால்வரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2021இல் வெளியிடப்பெற்றது.